உறுப்பு நிலையத்திற்குத் தேவையான கட்டிடம் பூர்த்தியாகி விட்டது. இந் நிலையத்திற்காக அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் அனைவரும் வேலையில் சேர்ந்துவிட்டனர். அவர்களில் சிலர் பம்பாயிலும் பூனாவிலும் உள்ள செயற்கை உடலுறுப்பு நிலையங்களில் பயிற்சி பெற்றுள்ளனர். இந்த உறுப்புகளைச் செய்வதற்குரிய யந்திரங்கள் ரூ. 81,000 செலவில் நிறுவப்பட்டுள்ளன. புனரமைப்புத் துறைக்கு வேண்டிய சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் அதற்குத் தேவையான தோல், இரும்பு, மரம் போன்ற மூலப் பொருட்களும் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையம் பணியாற்றத் தொடங்கிவிட்டது.

Anicut across Araniar

* 252 Q.—Sri A. RAGHAVA REDDI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to construct an anicut across Araniar near Annappanaickenkuppam village ;

(b) whether the necessary estimates have been prepared ; and

(c) if not, the reasons for the delay?

The Hon. Sri P. KAKKAN : (a) (b) Yes.

(c) Does not arise.

(அ) & (இ) : ஆம்.

(உ) வினாவிற்கு இடம் இல்லை.

பொது இடங்கள் அல்லது சாலைகளின் பெயர்களை மாற்றுதல்.

* 253 கேள்வி.—திரு. இராம அரங்கண்ணல் : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பொது இடங்கள் அல்லது சாலைகளின் பெயர்களை மாற்றக் கூடாது என்று அரசாங்கம் நகர மன்றங்களுக்கு ஏதேனும் உத்தரவிட்டிருக்கின்றதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இல்லை.

தென்பசார் கிராமத்தில் ஏரி மராமத்து

* 254 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திண்டிவனம் வட்டம் தென்பசார் கிராம ஏரி கலிங்கல் மாற்றி அமைக்கும் மராமத்து வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு. பூ. கக்கன் : 1963-64 இறுதியில் இவ்வேலை எடுத்துக் கொள்ளப்பட்டு 1964-65-க்குள் முடிக்கப்படும்.

The work will be taken up at the end of 1963-64 and completed by 1964–65.